குருணாகல் பிரதேச சபை - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

குருணாகல் பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் குருணாகல் பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டில் திசம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 157,372 ஆன சுடலைக் கூடத்தின் எரிவாயு இருப்பின் பெறுமதி கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் பெறுமதி ரூபா 32,040 ஆன 11 இருப்பு விடயங்கள் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 இன் நிதிக் கூற்றுக்களில் சரிசெய்யப்படும்.	சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டிற்குரியதாக கிடைக்கபெற்ற மூலதன உதவி ரூபா 11,464,805 மூலதன உதவியின் கீழ் கணக்கீடு செய்யப்படாமல் கடன்பட்டோர் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டில் நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் நிதிக் கூற்றுக்களில் சரிசெய்யப்படும்.	சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு வருடாந்தம் தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழில்நுட்பத் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக செலுத்த வேண்டிய தொகையொன்று காணப்படாதிருக்கும் போது வருடாந்தம் பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட தொகையில் சேமிக்கப்பட்ட ரூபா 3,638,135 மற்றும் உப அலுவலக நூலகத்தை வலையமைப்பிற்காக வருடாந்த பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட தொகையில் சேமிக்கப்பட்ட ரூபா 3,800,000 கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டில் சரிசெய்யப்படும்.	எந்தவொரு கடப்பாடும் இன்றி கடன் கொடுத்தோராக கணக்கீடு செய்யாதிருத்தல் வேண்டும்.

(ஈ)	மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் கேட்போர்கூட கதிரைகளைப் பெற்றுக் கொள்வதற்காக எந்தவொரு கடப்பாடும் இல்லாதிருந்த போதிலும் ரூபா 2,500,000 கடன் கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் கேட்போர்கூட கதிரைகளுக்காக ரூபா 2,500,000 ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அதனை கொள்வனவு செய்வதற்கு 2025 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.	எந்ததொரு கடப்பாடும் இன்றி கடன் கொடுத்தோராக கணக்கீடு செய்யாதிருத்தல் வேண்டும்.
(உ)	2024 ஆம் ஆண்டின் போது கழிவு டெக்டர் வண்டி யொன்றை கொள்வனவு செய்வதற்காக வருடாந்த பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட 5,000,000 கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டமையால் ஆண்டின் செயற்பாட்டுச் செலவினம் மற்றும் கடன்கொடுத்தோர் அப் பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டில் கழிவுப் பொருள் டெக்டர் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.	எந்ததொரு கடப்பாடும் இன்றி கடன் கொடுத்தோராக கணக்கீடு செய்யாதிருத்தல் வேண்டும்.
(ஊ)	மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 11,755 அதிகரித்தும் கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 148,023 குறைத்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 இன் நிதிக் கூற்றுக்களில் சரிசெய்யப்படும்.	சரியான பெறுமதியை கணக்குளில் உள்ளடக்குதல் வேண்டும்.
(எ)	மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் கடன் ரூபா 619,225 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சரிசெய்யப்படும்.	சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஏ)	சபைக்குச் சொந்தமான கெப் வண்டி ஒன்றுக்கு ஏற்பட்ட விபத்து தொடர்பாக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆந் திகதி வரையில் அறவிட வேண்டி காணப்பட்ட ரூபா 741,500 கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சரிசெய்யப்படும்.	சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும்.

1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	காணி மற்றும் கட்டிடங்கள் கணக்கில் ஆரம்ப மீதி மற்றும் பட்டோலைகளின் ஆரம்ப மீதிக்கிடையே ரூபா 100,000 வேறுபாடு காணப்பட்டது.	2025 இன் நிதிக் கூற்றுக்களின் பட்டோலையில் சரிசெய்யப்படும்.	பட்டோலையின் பிரகாரம் கணக்கு மீதிகள் மற்றும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கணக்கு மீதிகள் சீராக்கி சரிசெய்யப்படல் வேண்டும்.
(ஆ)	ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணக் கணக்கின் மீதி மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமான பங்களிப்புக் கணக்கின் மீதிக்கிடையே ரூபா 51,648,187 வேறுபாடு காணப்பட்டது.	2025 இன் நிதிக்கூற்றுக்களின் மூலம் சரிசெய்யப்படும்.	சொத்துக்களின் பெறுமதிக்கு சமமான அளவினால் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமான பங்களிப்பு கணக்கிற்கு செலவு வைத்தல் வேண்டும்.

(இ)	மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு 03 கணக்கு விடயங்களின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் கூட்டுப்பெறுமதிக்கும், பட்டோலைகள் காண்பிக்கப்பட்டுள்ள மீதிகளுக்குமிடையே ரூபா 1,905,255 வேறுபாடு காணப்பட்டது.	2025 இன் நிதிக்கூற்றுக்களின் மூலம் சரிசெய்யப்படும்.	பட்டோலையின் பிரகாரம் கணக்குகள் மற்றும் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் கணக்கு மீதிகள் சீராக்கப்பட்டு சரிசெய்யப்படல் வேண்டும்.
(ஈ)	2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் நூலகப் புத்தகங்களின் பெறுமதிக்கும், பொருள் மெய்மை ஆய்வு அறிக்கையின் புத்தக பெறுமதிகளுக்குமிடையே ரூபா 5,370,236 வேறுபாடு காணப்பட்டது.	2025 ஆம் ஆண்டிற்காக கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்களின் பெறுமதி பொருள் மெய்மை ஆய்வில் உள்ளடக்காமை வேறுபாட்டிற்கு காரணமாக இருந்தது.	சகல விடயங்களையும் மேவுகை செய்யும் வகையில் மெய்மை ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வேறுபாடுகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பட்டோலைகள் சமர்ப்பிக்காமையின் காரணமாக தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்றில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 489,558,020 ஆன முன்னைய ஆண்டிற்குரிய சீராக்கம் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.	இந்த மீதிகள் கணக்கீட்டு குறைபாடுகளின் காரணமாக 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கொண்டுவரப்படுகின்றமையும் மீதியை உறுதிப்படுத்துவதற்கான பட்டோலைகள் சபையிடம் காணப்படவில்லை.	கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	முன்னைய ஆண்டுகளுக்குரிய ரூபா 1,012,471 ஆன நானாவித முற்பண மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.	நானாவித வைப்புக்கள் மற்றும் முற்பண பேரேட்டுக் கணக்குகளில் காணப்படுகின்ற மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான பட்டோலைகள் சபையிடம் காணப்படவில்லை.	கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

1.7 இணங்காமைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை			
	நிதிப் பிரமாணம் 371(2)	பெறுமதி ரூபா 1,012,471 ஆன காலாவதியான	தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை

		முற்பணம் திசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	எடுக்கப்படும்.	எடுத்தல் வேண்டும்.
(ஆ)	அரச நிருவாக சுற்றறிக்கை			
(i)	2002 பெப்ரவரி 25 ஆம் திகதிய இலக்கம் 01/2002 சுற்றறிக்கை.	சபை பயன்படுத்துகின்ற 28 வாகனங்களுக்கு நிறுவனத்தின் பெயருடன் அரச இலட்சினை பொறிக்கப்பட்டிருக்கவில்லை.	சகல வாகனங்களுக்காகவும் அரசாங்க இலட்சினையை இடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)_	2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய இலக்கம் 09/2009 என்ற அரச நிருவாக சுற்றறிக்கை	சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர், 03 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் 06 நாளாந்த தொழிலாளர்கள் கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தியிருக்க வில்லை.	குறைபாடுகளை சரிசெய்து கைவிரல் விரல் அடையாளத்தைப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து சரியான மனிதவள முகாமைத்துவமொன்று பேணிச்செல்லப்படல் வேண்டும்.
(இ)	1992 பெப்ரவரி 26 ஆந் திகதி இலக்கம் 05/01/ 119 என்ற நகர அபிவிருத் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம்	திட்டமிடல் குழு அலுவலக நேரத்திற்கு புறம்பாக நடாத்த வேண்டியிருந்த போதிலும் சபையினால் பிற்பகல் 01 இற்கும் 02 மணிக்கும் இடையிலான அலுவலக நேரத்தில் ஆரம்பிக்கப்பட்டு அதற்கான படியாக ரூபா 553,500 வழங்கப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	ஆலோசனைக் கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 137,410,669 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 244,928,314 ஆகும்.

2.2 நிதிக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபைக்குச் சொந்தமான சேமிப்புக் கணக்கில் மீளாய்வாண்டு முழுவதும் ரூபா 260 மில்லியனுக்கு மேற்பட்ட சராசரி மீதியொன்று நிறுத்தி வைக்கப்பட்டமை மற்றும் அதிக நலன்கள் பெறக்கூடிய முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்துவது தொடர்பில் பொது மக்கள் சேவை வழங்குகின்ற செயற்திட்டங்களில் ஈடுபடுத்துவதற்கோ முகாமைத்துவம்	2025 ஆம் ஆண்டில் நிலையான வைப்பை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதியினை விளைவற்று வைக்காமல் ஆகக்கூடிய பயன்களைக் பெற்றுக்கொள்ளும் முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்துவதற்கோ அல்லது செயற்திட்டங்களில் ஈடுபடுத்துவதற்கோ

கவனம் செலுத்தாமையினால் உயர்ந்த நலன்கள் சபைக்கு இழக்கப்பட்டிருந்தது.		நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2.3 வருமான நிர்வாகம்

2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		2024				2023			
	வருமானமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000
i.	ஆதன வரியும் வரியும்	16,304	19,347	20,892	11,247	11,244	29,037	16,245	12,791
ii.	வாடகை	3,029	3,954	3,476	725	1,253	2,016	1,768	248
iii.	அனுமதிப் பத்திரக் கட்டணம்	2,494	2,856	2,856	-	2,201	2,735	2,735	-
iv.	ஏனைய வருமானம்	230,801	230,801	187,676	233,305	190,180	190,180	2,835	190,180
	மொத்தம்	252,628	256,958	214,900	245,277	204,878	223,968	23,583	203,219

2.3.2 வருமான சேகரிக்த்தலின் செயலாற்றல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டில் சிற்றையிடப்பட்ட வருமானம் ரூபா 257 மில்லியனாக இருந்ததுடன் முன்னைய ஆண்டிற்குரிய நிலுவை வருமானத்தின் பெறுவனவையும் உள்ளடக்கிய ரூபா 215 மில்லியன் மீளாய்வாண்டில் சேரிக்கப்பட்டிருந்தது. கடந்த ஆண்டுகளில் நிலுவை வருமானத்துடன் மீளாய்வாண்டின் இறுதியின் போது ரூபா 245 மில்லியன் மேலும் அறவிட வேண்டி காணப்பட்டது.	மீளாய்வாண்டின் இறுதியில் காணப்படுகின்ற நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவைப் பணத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	**வீதவரியும் வரியும்**		
(i)	மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 12,791,470 ஆதனவரி நிலுவையில் ரூபா 3,582,558 தொகையும், மீளாய்வாண்டில் சிற்றையிடல் ரூபா 19,346,939 தொகையில் ரூபா 7,349,283 தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.	நிலுவைப் பணத்தை அறவிடுவதற்காக நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது.	நிலுவை ஆதன வரியை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ii)_	பிரதேச சபைக்கு 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு 06 அரசாங்க நிறுவனங்களில் இருந்து கூட்டுமொத்தமாக ரூபா 369,642 ஆதனவரி நிலுவை கட்டணம் அறவிட வேண்டியிருந்தது.	அந்த பணத்தை செலுத்துமாறு நிலுவைக் கட்டணத்தையும் குறிப்பிட்டு வருடாந்தம் அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது.	உரிய நிறுவனங்களுக்கு அறிவித்து ஆதனவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதியில் ரூபா 4,125,587 தொகை 05 வருட காலத்தை விஞ்சி இருந்தது.	மீதிகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பெற வேண்டிய பணத்தை விரைவாக அறவிடுதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதியில் ரூபா 2,517,032 தொகை 05 வருட காலத்தை விஞ்சி இருந்தது.	கண்டறிந்து நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.	செலுத்த வேண்டிய மீதிகளின் இருப்பினை கண்டறிந்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2024 திசம்பர் 27 ஆம் திகதி வரை சபைக்கு கிடைக்கப்பெற்ற 338 பொது மக்கள் முறைப்பாடுகளில் 63 முறைப்பாடுகள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	முறையான கடமைகளை கையளிக்குமாறும் ஒட்டுமொத்த பிரதேச அதிகார பிரதேசத்திலும் 05 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்காக 05 வலையங்களின் கீழ் பிரித்து வழங்கி கடமைகள் கையளிக்கப்பட்டமையால் அவர்களுக்கு கையளிக்கப்படுகின்ற ஏனைய தொழில்நுட்ப கடமைகளின் வேலை இயலளவுடன் ஒப்பிடும் போது பொது மக்கள் முறைப்பாடுகள் தொடர்பாக பதிலளிப்பதற்கான காலம் மாற்றமடைந்திருந்தது.	பொது மக்கள் முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு உத்தியோகத்தரை நியமித்து விரைவான வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்படல் வேண்டும்.

3.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
பிரதேச சபைக்குச் சொந்தமான மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 7,500,000 ஆன கல் உருளை 2016 ஆம் ஆண்டில் இருந்தும், பெறுமதி ரூபா 40,000 ஆன மோட்டார் சைக்கிள் 2019 ஆம்	• கல் உருளை பரப்பளவில் பெரியதாக இருந்தமையால் இந்த அதிகாரப் பிரதேசத்திற்குரதிய வீதி முறைமைக்கு ஈடுபடுத்த	சபையில் சொத்துக் களிலிருந்து உச்ச அளவில் பயன்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத சொத்துக்களை

ஆண்டில் இருந்தும் விளைவற்றுக் காணப்பட்டது.	முடியாதிருந்தது. • மோட்டார் சைக்கிளைப் பழுதுபார்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் கடமை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படும்.	விற்றுத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) 1993 பெப்ரவரி 08 ஆம் திகதி வட மேல் பிரதேச செயலகத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற கெப் வண்டி மீளாய்வாண்டு வரையிலும் சபையின் பெயரில் கையேற்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் உரிய அங்கீகாரம் வழங்கப்பட்ட பின்னர் சபையின் பெயருக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சபை பயன்படுத்துகின்ற வாகனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ) வெல்லவ வைத்தியசாலையின் பின் பக்கத்தில் அமைந்துள்ள 10 காணிக் கூறுகளுக்கு நுழைவதற்கு நிரந்தர வீதியொன்றை பெற்றுக்கொள்வதற்கு பிரதேச சபை மற்றும் காணி உரிமை யாளர்களினால் கூட்டுமொத்தமாக ரூபா 1,100,000 தொகை 2023 மே 09 ஆம் திகதி குருணாகல் பிரதேச செயலகத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2025 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் வீதிக்காக காணியைக் கையேற்கும் நடவடிக்கைகள் முடிவடைந்திருக்கவில்லை.	கையேற்கும் நடவடிக்கைகள் தற்போது செயற்படும் நிலையில் காணப்படுகின்றது.	பிரதேச செயலாளருக்கு அறிவித்து கையேற்கும் பணிகளை துரிதப்படுத்துதல் வேண்டும்.

3.4 பெறுகைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
பெறுகைத் திட்டம் 2024 ஆம் ஆண்டில் செயல் முன்னேற்றத்தைப் பரீட்சித்த போது மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 5.9 மில்லியன் ஆன 06 நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களுக்குரிய செயல் முன்னேற்றம் 0 வீதம் முதல் 09 வீதம் வரையான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.	எதிர்காலத்தில் செலவினப் பகுப்பாய்வை மேற்கொண்டு செலவினத் தலைப்பிற்குரிய நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பெறுகைத் திட்டத்தை செயற்படு நிலையில் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.5 ஒப்பந்த நிருவாகம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) **சாரகம நிலக் குறிகாட்டி தயாரித்தல் செயற் திட்டம்**		
(i) முதலாவது கட்டம் 2024 மே 14 ஆந் திகதி முடிவடைய வேண்டியிருந்த போதிலும் 2024 யூன் 11 ஆந் திகதி வேலை பூர்த்திசெய்யப்பட் டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் நிபந்தனை இலக்கம் 04 இன் பிரகாரம் செயற்திட்டம் 04 வாரங்கள் தாமத காலத்திற்காக ரூபா 27,837 தாமதக் கட்டணம் ஒப்பந்தகாரரிடமிருந்து அறவிடப்பட்டிருக்க வில்லை.	தாமதக் கட்டணத்தை அறவிடுதல் தவறொன்றினால் கைவிடப் பட்டிருந்தது.	உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ii)	சூரிய கல மின் விளக்குள் மேவுகை செய்வதற்காக ரூபா 1,012,560 செலவில் தயாரிக்கப்பட்டிருந்த இரும்பு கம்பி மேவுகை 06 மாதங்களை விஞ்சுவதற்கு முன் 04 இடங்களில் உடைந்திருந்தமை மற்றும் 04 சூரிய கல மின் விளக்குள் உடைந்து காணப்பட்டது.	இழப்பு சேதங்களுக்கான தொகையினை பெற்றுக் கொண்ட பின்னர் அது தொடர்பாக நடவடிக்கை எடுத்து மீண்டும் மின்குமிழ் மற்றும் மேவுகை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுப்படும்.	இது தொடர்பாக பரிசோதனை மேற் கொண்டு இழப்பை மீளளிப்புச் செய்தல் வேண்டும்.
(ஆ)	**மல்கடுவாக பந்தனா பண்டாரநாயக்கபுர பகல் இரவு கரப்பந்தாட்ட விளையாட்டு அரங்கு**		
(i)	பெறுகை வழிகாட்டி கோவையின் 4.3.1 ஆம் பிரிவின் பிரகாரம் மொத்த கிரயம் மதிப்பீடொன்று தயாரிக்கப்படாமல் ஒதுக்கப்பட்ட தொகைக்கு சமமான பிரகாரம் மதிப்பீடு தயாரித்து கட்டம் கட்டாக சமூக அடிப்படையிலான அமைப்புக்கள் மூலம் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருந்தது.	மொத்த கிரய மதிப்பீட்டிற்குரிய உடன்படிக்கை செய்யும் இயலுமை அல்லது அந்த சந்தர்ப்பத்தில் மேலதிக நிதியினை சபை நிதியத்திலிருந்து ஒதுக்கிக் கொள்ளும் இயலுமை காணப் படவில்லை. அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளுக்கு உரியதாக மாத்திரம் மதிப்பீடு தயாரித்து உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	மொத்தக் கிரய மதிப்பீட்டில் உரிய செயற் திட்டத்திட டமொன்றை ஆரம்பிக்கவேண்டி யிருந்ததுடன் கிடைக்கின்ற நிதி ஏற்பாட்டின் பிரகாரம் மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும்.
(ii)	கரப்பந்தாட்ட விளையாட்டரங்கு நிர்மாணிக்கப்பட்ட இடத்திற்கு மேற்பகுதியில் அதி சக்திவாய்ந்த மின்சார வயர் முறைமை யொன்று உள்ளமையினால் விளையாட்டு வீரர்களின் உயிருக்கு ஆபத்து தொடர்பான பிரச்சினையொன்று காணப்படுகின்றமையும் சரியான சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளாமல் இதற்கான காரணமாக இருந்தமையும் மேலும் அவதானிக்கப்பட்டது.	அந்த இடத்தில் விளையாடுவதற்கு பாதுகாப்பதற்றதாக இருந்தமை காணப்பட்டதா என்பது தொடர்பாக உறுதிப்படுத்தல் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்காக வட மேல் விளையாட்டு அமைச்சின் விளையாட்டு பிரிவிற்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளதுடன் அந்த அறிக்கை கிடைக்கப் பெற்ற பின்னர் மிகுதி நடவடிக்கைகள் தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படும்.	செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முன் முறையான சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(iii)	2024 திசம்பர் 31 ஆம் திகதி வரையில் இந்த விளையாட்டரங்கின் ஆரம்ப நிர்மாணங்களுக் காக ரூபா 1,469,950 செலவில் 03 வருட காலம் கடந்திருந்த போதும் மேலும் மேற் கொள்ள வேண்டிய நிர்மாணங்கள் மேற் கொள்ளாமமையினால் பயன்பாட்டிற்கு எடுக்காமல் காடு வளர்ந்து காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.	விளையாட்டு அமைச்சின் அறிக்கை கிடைத்தவுடன் இது தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	சாத்தியவள ஆய்வை மேற்கொண்டு செயற் திட்டத்தை ஆரம்பித்தல் வேண்டும்.
(இ)	சாந்தி விகார மாவத்த குறுக்கு வீதி மற்றும் சாந்தி விகார மாவத்த II ஆம்	கௌரவ ஆளுநரின் கட்டளையாக	இவ்வாறான நிலைமையொன்று

	கட்ட வீதி கொங்கிறீட் இடுவதற்காக கூட்டுமொத்தமாக ரூபா 6,250,000 ஆன ஒப்பந்தப் பெறுமதியில் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒப்பந்த உடன்படிக்கை விவாசாய அமைச்சிற்கு காணப்படுகின்ற இயலுமை தொடர்பாக கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் இயலுமை சான்றிதழை விநியோகித்தல், பிரதேச சபையுடன் உடன்படிக்கை செய்தல், வீதியினை அமைத்தல், கொங்கிறீட் இடல் மற்றும் கொங்கிறீட் மாதிரிகளைப் பெற்றுக்கொள்ளல் போன்ற சகல சந்தர்ப்பங்களும் 2023 திசம்பர் 22 ஆம் திகதி அதாவது ஒரே நாளில் மேற் கொள்ளப்பட்டிருந்தது.	இருந்தமையாலும், திசம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் கொடுப்பனவு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியிருந்தமை யாலும் தமது ஆகக் கூடிய அர்ப்பணிப்புடன் செயற்பட்டு உடன்படிக்கை திகதியில் வீதி அமைப்பைத் தயாரித்தல் மேற் கொள்ளப்பட்டிருந்தது. இந்த வேலை நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவதற்கிடையே உள்ளூராட்சி பொறியலாளரி னாலும் அவ்வப்போது வருகை தந்து தேவையான ஆலோசனை வழங்கப்பட்டதுடன் செயற் திட்டத்தை நிறைவேற்றுகின்ற காலத்தில் முழுமையான மேற்பார்வை பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் மேற்கொள் ளப்பட்டிருந்தது.	பிரயோக ரீதியில் மேற்கொள்ள முடியாதிருந்தமை யால் கவனத்துடன் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	**மல்கடுவாவ பண்டாரநாயக்கபுர உடற்பயிற்சி நிலையக் கட்டிடத்தின் கட்டம் II**		
(i)	நிர்மாணிப்பதற்குரிய திட்டம் (Drawing) கோவையில் காணப்படாதிருந்ததுடன் பெறு கைகள் வழிகாட்டிக் கோவையின் 4.3.1 ஆம் பிரிவின் பிரகாரம் மொத்தக் கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.	மொத்த கிரய மதிப்பீடொன்று தயாரிப்பதற்கு முடியாதிருந்ததுடன் பின்னர் மதிப்பீடொன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.	மொத்தக் கிரய மதிப்பீடொன்று தயாரித்து செயற்திட்டம் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.
(ii)	கட்டம் I இன் கீழ் தரைமாடியில் நிர்மாணிக்கப்பட்ட 03 கடைகள் 2024 திசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் 04 வருட காலம் வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் மிகுதி நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	உரிய கடைகளை நிர்மாணித்தல் முடிவடைந்திருந்த போதிலும் அதற்குரிய மேலும் நிர்மாணிக்க வேண்டிய மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்வதற்கு காணப்படுகின்றமையால் இந்தக் கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு முடியாதிருந்தது.	மொத்தக் கிரய மதிப்பீடொன்றைத் தயாரித்து செயற் திட்டம் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.
(iii)	இந்தக் கட்டிடத்தில் மேல் மாடியை நிர்மாணிப்பதற்காக கொங்கிறீட் தட்டு ஒன்றின் அடிப்படையில் பயன்படுத்தப்பட்டிருந்த 14 தூண்கள் கம்பிகள் கள்வர்களால் வெட்டி அகற்றப்பட்டிருந்தமை.	உரிய நிலத்தை சுத்தம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமையால் கட்டிடத்திற்காக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும்.	சபையின் சொத்துக்களின் பாதுகாப்பு தொடர்பாக முறையான வேலைத் திட்டமொன்று அமுல்படுத்தப்படல் வேண்டும்.

(உ)	வெல்லவ கடைத் தொகுதி கட்டிடத்தை நிர்மாணித்தலைத் திட்டமிடும் போது நிலத்தில் காணப்படுகின்ற விஷேட இலட்சணங்களை இனங்கண்டு அதற்காக பொருத்தமான தீர்வினை ஈடுபடுத்த வேண்டியிருந்த போதும் முதலாவது, இரண்டாவதும் மற்றும் மூன்றாவது கட்டம் என்ற மூன்று கட்டங்களிலும் இதில் காணப்படுகின்ற வாய்க்கல் தொடர்பாக எந்தவொரு ஏற்பாடுகளும் வழங்கப்பட்டிருக்க வில்லை. இதன் காரணமாக இந்த வாய்க்காலில் நீர் இந்த நிர்மாணம் மேற்கொள்ளப்படுகின்ற கட்டிடம் ஊடாக வடிந்து செல்கின்றமையால் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளாமல் திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருந்தமையும் தரைமாடியில் மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்த வாய்க்கால் இடையூறாக இருந்தமையும் அவதானிக்கப்பட்டது.	பிரதான வீதி ஊடாக அமைக்கப் பட்டுள்ள மதகின் ஊடாக ஓடி வருகின்ற நீர் இந்தக் காணி ஊடாக கீழுள்ள வாய்க்காலுக்கு செல்வதனால் தரை மாடியை விட கீழ் மட்டத்தில் காணப்படுகின்றது.	முறையான சாத்தியவள ஆய்வை மேற்கொண்டு செயற்திட்டம் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

3.6 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உரித்தற்ற 08 பதவிகளுக்காக 23 உத்தியோகத்தர்கள் சபையினால் சேர்க்கப்பட்டிருந்தனர்.	சகல பதவிகளும் அங்கீகரித்துக் கொள்வதற்காக தற்போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.	பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	சேர்க்கப்பட்ட பதவியின் கடமைகள் நிறைவேற்றாமல் ஏனைய பதவியின் சேவையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர் களின் எண்ணிக்கை 15 ஆகும்.	இந்த உத்தியோகத்தர்கள் சகலருக்காகவும் சேவைத் தேவையின் அடிப்படையில் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.	சேர்க்கப்பட்ட பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் சுகாதாரப் பிரிவில் நிறைவேற்றுவதற்குத் திட்டமிடப்பட்ட 20 செயற்திட்டங்களில் ரூபா 3,260,000 ஆன நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த 05 செயற்திட்டங்கள் நிறைவேற்றப் படாதிருந்ததுடன் பௌதீக திட்டம் வீதிகள், காணி மற்றும் கட்டிட பிரிவில் நிறைவேற்றுவதற்குத் திட்டமிடப்பட்ட 12 செயற்திட்டங்களில் ரூபா 10,339,500 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த 04 செயற்திட்டங்கள் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை.	பல்வேறு பிரச்சினைகளின் காரணமாக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுப்பதற்கு முடியாதிருந்தது.	வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளக்கப்படாத ரூபா 49,759,747 ஆன 44 செயற்திட்டங்கள் வருடாந்த பாதீட்டின் மூலம் நிதி ஏற்பாடு ஒதுக்காமல் நிறைவேற்றப்பட்டிருந்தது.	ஆண்டில் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு எந்தவொரு முறையிலும் இந்தப் பாதிப்பு ஏற்படாமல் அமுல்படுத்தி மிகவும் ஆக்கபூர்வமான முகாமைத்துவ கருகளாக பயன்படுத்தப்பட்டுள்ளது.	வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 இன் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபையினால் அறிவிக்கப்பட்டு சபை அதிகாரப் பிரதேசத்தில் உள்ள மக்களின் பல்வேறு தேவைகளுக்காக ரூபா 34,050,970 செலவில் 15 நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.	நடப்பாண்டிலும் நிறைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிறைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.